# பிற்சேர்க்கை 2

# மாற்றத்திற்கான மனித செயல்பாடு

*"தேவனுடைய கிருபையைப் பெறுவதற்கு பதில்செயல் ஒன்று செய்யப்பட வேண்டும் என்று அனைவரும் ஒப்புக் கொள்ளு கின்றனர். செய்யப்பட வேண்டிய பதில்செயல் பற்றிச் சிலர் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர். இதற்குத் தீர்வு ஒன்றுள்ளதா? ஆம். என்ன பதில்செயல் செய்யப்பட வேண்டும் என்பதை வேதாகமம் நமக்குக் கூறும்படி நாம் அனுமதிக்க வேண்டும்."*

பாவியொருவர் கிறிஸ்தவராவதற்குச் செய்ய வேண்டிய செயல் பாடுகள் யாவை? இரட்சிப்பையும் தேவனுடைய கிருபையையும் பெற்றுக் கொள்ள அவர் செய்ய வேண்டியது என்ன?

ஒரு கிறிஸ்தவராவது எப்படி என்பதற்கான புதிய ஏற்பாட்டின் அறிவுறுத்தல்கள் "செயல்பாடுகள்" அல்லது "படிகள்" என்று அழைக்கப்பட முடியும். சுவிசேஷத்திற்கான இந்த பதில்செயல்கள், பாவியொருவர் தேவனுடைய தெய்வீகப் பணியான இரட்சிப்பைப் பெறுபவராகும் வழி முறைகளைக் கொண்டுள்ளன. இரட்சிப்பின் செயல்முறையில் பாவியா யிருப்பவர் செயலற்றவராய் இருப்பதில்லை. நமது இரட்சிப்பின் மூல ஆதாரமாகிய தேவன் அவரை இரட்சிக்கின்றார் என்பது உண்மையே, ஆனால் தேவனுடைய இரட்சிப்பைப் பாவி பெற்றுக் கொண்டு அதில் வழி நடக்க வேண்டும்.

செயல்பாடுகளின் இந்த அட்டவணையைக் கவனமாய்ப் படியுங்கள். ஒவ்வொரு செயல்பாட்டின் கீழும் அந்தச் செயல்பாடு நடத்தப்பட்டாக வேண்டும் என்று உறுதிப்படுத்தும் வேத வசனங்களை நீங்கள் காண்பீர்கள். இந்த அட்டவணையின்படி கிறிஸ்துவின் மீட்பைப் பெற்றுக் கொள்ள மாறுபட்ட பதினான்கு படிகள் மற்றும்/அல்லது செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த அட்டவணையானது பொதுவான பதில்செயல்கள் மற்றும் குறிப்பிட்ட/திட்டவட்டமான பதில்செயல்கள்

என்று இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பதில்செயல்களில் ஒன்றுடன் ஒன்று ஒத்தவைகளும் உள்ளன என்பது தெளிவு.

சிலவேளைகளில், ஒரு தனிப்பட்ட அல்லது திட்டவட்டமான படியானது ஏவப்பட்ட எழுத்தாளரால் அதை முழுமையின் பகுதியாக அவர் ஏற்படுத்தும் வகையில், சினையாகு பெயராகப் பயன்படுத்தப் படுகின்றது. எடுத்துக்காட்டாக, "விசுவாசம்" என்ற வார்த்தையானது இரட்சிப்புக்கு அவசியமான மனித செயல்பாடு முழுமையையும் குறிக்கப் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது. இந்தச் செயல் செய்யப்படுகின்ற போது, எழுத்தாளர், "விசுவாசம்" என்ற வார்த்தையை, அவசியமான மனித கீழ்ப்படிதல் யாவற்றையும் சுருக்கமாய்க் குறிக்கப் பயன்படுத்தியுள்ளார். ஒரு செயல்பாடானது இவ்விதமாய்ப் பயன்படுத்தப்பட்டிருக்கையில், அச்செயல்பாடானது, பாவியினால் செய்யப்பட வேண்டிய மற்ற அனைத்து செயல்பாடுகளையும் உருவக நடையில் உள்ளடக்குகின்றது. மற்ற செயல்பாடுகள் யாவும் ஒரு செயல்பாட்டில் உள்ளடக்கப்படுகின்றன. ஒரு செயல்பாட்டில் இவ்விதமாகப் பயன்படுத்தும் வசனங்களை நன்கு கவனியுங்கள்.

## பொதுவான பதில்செயல்கள்

*(1)* **கிறிஸ்துவினிடத்தில் நாம் வர வேண்டும்.**

*மத். 11:28-30*

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப் பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது."

*வெளி. 22:17*

"ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக் கடவன்; விருப்ப முள்ளவன் ஜீவத் தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக் கடவன்."

*(2)* **நம்மை நாம் இரட்சித்துக் கொள்ள வேண்டும்.**

*அப். 2:40*

"இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சிகூறி, மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான்."

(3) **நாம் கீழ்ப்படிய வேண்டும்.**

*ரோமர் 6:17, 18*

*''முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்.''*

(4) **நாம் வசனத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.**

*அப். 2:41*

*"அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர் கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்."*

(5) **நாம் வசனத்தில் நிலைத்திருக்க வேண்டும்.**

*யோவா. 8:31, 32*

*"இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி, நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால், மெய்யாகவே என் சீஷராயிருப் பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்."*

(6) **நாம் பாவத்துக்கு மரிக்க வேண்டும்.**

*ரோமர் 6:1, 2*

*"ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலை நிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?"*

(7) **நாம் புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ள வேண்டும்.**

*கொலோ. 3:10*

*"தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே."*

## திட்டவட்டமான பதில்செயல்கள்

(1) **நாம் தேவனுடைய வசனத்தைக் கேட்க (கேள்விப்பட) வேண்டும்.**

*அப். 18:8*

*"ஜெப ஆலயத் தலைவனாகிய கிறிஸ்பு என்பவன் தன் வீட்டார் அனைவரோடும் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவனானான். கொரிந்தியரில் அநேகரும் சுவிசேஷத்தைக் கேட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள்."*

*ரோமர் 10:17*
*"ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்."*

**நாம் கேட்டவைகளை எச்சரிக்கையோடு கவனிப்பதால்**
*அப். 17:11*
*"அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்."*

*1 தெச. 5:21*
*"எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்."*

**நாம் எவ்விதமாய்க் கேட்கின்றோம்/கேள்விப் படுகின்றோம் என்பதில் எச்சரிக்கையோடு இருப்பதால்.**
*மத். 7:24*
*"ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்."*

*மத். 13:9*
*"கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்."*

*(2)* **நாம் விசுவாசிக்க வேண்டும்**
*ரோமர் 5:1*
*"இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்."*

**தேவனுக்குள்**
*எபி. 11:6*
*"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்."*

**கிறிஸ்துவுக்குள்**

*யோவா. 3:16*

*“தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.”*

*(3)* **நாம் மனந்திரும்ப வேண்டும்.**

*அப். 11:18*

*“இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து, அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதியாருக்கும் அருளிச் செய்தார் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்.”*

*அப். 17:30*

*“அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்.”*

*2 பேது. 3:9*

*“தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.”*

*(4)* **நாம் மறுபடியும் திரும்ப வேண்டும்.**

*அப். 2:38*

*“பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று கூறினார்.”*

*அப். 3:19, 20*

*“ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், … உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்.”*

*(5)* **நாம் கிறிஸ்துவை அறிக்கையிட வேண்டும்.**

*ரோமர் 10:10*

*“நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்.”*

*1 யோவா. 4:15*

''இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்.''

*(6)* **நாம் ஞானஸ்நானம் பெற வேண்டும்.**

*அப். 22:16*

''இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு.''

*1 பேது. 3:21, 22*

''அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது; அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலது பாரிசத்தில் இருக் கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.''

*(7)* **நாம் தேவனைத் தொழுது கொள்ள வேண்டும்.**

*அப். 2:21*

''அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற வனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்.''

*அப். 22:16*

''இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு.''